**சார்பு நீதிமன்றம், அவிநாசி**

**OS – 130/2020**

நாள் 06.10.2025

PW1 – சுப்பிரமணியம்

த/பெ – லேட். கருப்பண கவுண்டர்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06th day of October 2025)**

**7–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் பாகம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் பழைய சர்வே எண்.91, அதன் புதிய ரீ–சர்வே எண்.113 ஆகும். அதில் 8.20 ஏக்கர் பரப்பு உள்ளது. தாவா சொத்தில் 37 சென்ட் சொத்தை எனது அப்பா கருப்பண கவுண்டர் கிரையம் வாங்கினார். தாவா சொத்து ஆதியில் யார் யாருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்பதையும், அதில் யாருடைய வாரிசுகளிடமிருந்து கிரையம் வாங்கினோம் என்பது குறித்து வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நானும், எனது உடன்பிறந்த சகோதரர்களும் சேர்ந்து கடந்த 05.04.1995–ம் தேதியில் பதிவு பாகப்பிரிவினை ஏற்படுத்திக் கொண்டதாக வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதனால், நாங்கள் தாவா சொத்தில் கூட்டு உரிமையாளர்கள் என்பது தான் என்னுடைய வாதம் என்றால் சரிதான், அந்த கறார் பாகப்பிரிவினை மூலம் எனது அப்பா கிரையம் பெற்ற 37 சென்ட் எனக்கு பாகமாக ஒதுக்கி கொடுத்துள்ளார்கள். தாவா சர்வே எண்.113 ஆனது ஆதியில் கொண்டத்து கவுண்டர் வகையறாவிற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அந்த விபரத்தை எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த கொண்டத்து கவுண்டர் வகையறாக்கள் தாவா சர்வே எண்.113–ஐ பொறுத்து கடந்த 12.11.1959–ம்

தேதியிட்ட பதிவு பாகப்பிரிவினை பத்திரத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள் என்றால், அதில் 2.87 ஏக்கர் சொத்து மட்டும் தான் கொண்டத்து கவுண்டருக்கு பாத்தியப்பட்டது. அந்த 2.87 ஏக்கர் சொத்தை கொண்டத்து கவுண்டருக்கு B அட்டவணை சொத்தாக ஒதுக்கி கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான்.

2. அந்த கொண்டத்து கவுண்டருக்கு 3 பெண் மக்கள், ஒரு ஆண் மகன் வாரிசுகள் ஆவார்கள். அந்த ஆண் மகன் பாட்டைய கவுண்டருக்கு சின்னசாமி, நவரத்தினம் என்ற இரண்டு பிள்ளைகள் வாரிசுகள் ஆவார்கள். அந்த கொண்டத்து கவுண்டர் அவருக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட 2.87 ஏக்கர் சொத்தைப் பொறுத்து எந்தவொரு விருப்புறுதி ஆவணமும் எழுதி வைக்காமலேயே இறந்து போய்விட்டார் என்றால் அது எனக்குத் தெரியாது. அதனால், அந்த கொண்டத்து கவுண்டருக்கு பாத்தியப்பட்ட 2.87 ஏக்கர் சொத்திற்கு அவரது மகன் பாட்டைய கவுண்டர், பேரன், பேத்திகளான சின்னச்சாமி, நவரத்தினம் ஆகிய மூவரும் தான் கூட்டு உரிமையாளர்கள் என்றால் அது எனக்குத் தெரியாது.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.10.06 13:17:17 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**